<u>செய்தி வெளியீடு எண்.666</u> <u>நாள்.16.10.2007</u>

# தமிழ்நாடு முழுவதும் குறியீடு நிர்ணயித்து மின்சாதனங்கள் தரச்சோதனை – சிறுதொழில் துறை ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் திரு பொங்கலூர் நா. பழநிசாமி அறிவுரை.

----

தமிழ்நாடு அரசு சட்டப்பேரவையில், கடந்த சட்டமன்றத்தொடரின்போது சிறுதொழில் துறை தொடர்பாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு பொங்கலூர் நா. பழனிசாமி அவர்கள் அவ்வப்போது அலுவலர்களுடன் ஆய்வு நடத்தி பணிகளை விரைவுபடுத்தி வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக 15.10.2007 அன்று தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள தொழில் துறை கூட்டரங்கில் மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்கள், தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் சிறுதொழில் துறை செயலர் திரு. பி. செல்வம் இ.ஆ.ப., தொழில் துறை ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவன சிறப்பு அலுவலர் திரு ஆர். ஸ்ரீராம் இ.ஆ.ப., சிட்கோ மேலாண்மை இயக்குநர் திரு ஆர். சந்தானம் இ.ஆ.ப., சேகோசர்வ் மேலாண்மை இயக்குநர் திரு கார்த்திகேயன் இ.ஆ.ப., இன்கோசர்வ் மேலாண்மை இயக்குநர் திரு து. ராஜேந்திரன், இ.ஆ.ப, டான்சி மேலாண்மை இயக்குநர் ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில் துறை தொடர்பான நடவடிக்கையை ஆய்வு செய்தார்கள்.

மாவட்டங்களில் சிறுதொழில் தொடங்க விரும்பும் தொழில் முனைவோர்களுக்கு முழு ஊக்கம் அளிப்பதோடு, அரசு சார்பில் உள்ள சலுகைகளை விவரமாக எடுத்துச் சொல்ல, மாவட்டத் தொழில்மையப் பொது மேலாளர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அறிவுறுத்தினார். மாநிலம் முழுவதும் மின் சாதனங்களை Random முறையில் மாதத்தில் குறியீடு (Target) நிர்ணயித்து சோதனை மேற்கொள்ள கேட்டுக்கொண்டார். இதனால் தரமற்ற மின்சாதனங்கள் தயாரிப்போர் மீது நடவடிக்கை எடுப்பதோடு தரமான மின்சாதன பொருட்கள் கிடைக்க வழியேற்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

2007–2008 ஆண்டுக்குரிய திட்டங்கள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை விரைவாக நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும், சிட்கோ நிறுவனம் மூலம் கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தொழிற்பேட்டைகள் அமைக்கும் பணிகள் விரைவுபடுத்துப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாவட்டங்களில் உள்ள தொழில்மைய பொது மேலாளர் அலுவலகப்பயனுக்காக ரூ.40 இலட்சம் மதிப்பில் 9 பொலிரோ வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. விரைவில் அவை உரிய மாவட்டங்களுக்கு வழங்கப்படும்

இந்த ஆண்டிற்கான பாரதப்பிரதமர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 11.10.07 முடிய 1164 நபர்களுக்க உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் டான்சி நிறுவனத்தில் உபயோகத்தில் இல்லாத இடங்களை அரசு சார்பு நிறுவனங்களுக்கு ஏற்புடைய விலையில் விற்க நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொண்டார்.

விண்ணமங்கலம், மயிலாடுதுறை, காக்களூர், கிருஷ்ணகிரி போன்ற இடங்களில் தொழில் தொடங்குவோருக்கு தொழிற்சாலைக்கான மனைகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சிட்கோ நிறுவன மேலாண்மை இயக்குநரைக் கேட்டுக்கொண்டார்.

தாய்கோ வங்கி கிளைகளை மற்ற மாவட்டங்களில் விரிவுப்படுத்துதல், கூட்டுறவு நிறுவனங்களுக்கு தாராளமாக கடன் வழங்குதல், வங்கி வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் வசதிகள், தொழில் வணிகத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பரிசோதனை மையங்களை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தொழில் வணிகத்துறை கூடுதல் இயக்குநர்கள் திரு எம்.எஸ்.எஸ் ரவி, திரு ஜோசப் ரவிதேவசகாயம், டான்கோபெட் மேலாள்மை இயக்குநர் திரு பரமேஸ்வரன், தாய்கோ வங்கி தனி அலுவலர், திரு வி.எல் மணிவண்ணனார், மற்றும் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

--------

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.